64

64

2-OCT 1934

*MONTHLY.*

Vol. I.] A. M. D. G. [No. 1.

# The Guide

# வழிகாட்டி.

*"Ego Sum Via"*

OCTOBER 1934.



குன்னூர்

அர்ச். அந்தோனியார் கோவில்

மாதாந்தரப் பத்திரிகை.

EDITED BY

ECHU, PARISH PRIEST, COONOOR.

PRINTED BY

OOSAY, THE VICTORIA PRESS, COONOOR.

# OUR COMPETITION.

## நமது பந்தய வியாசம்.

---

"கிறிஸ்துவ குடும்பத்தின் நல்லொழுக்கம்" என்கிற விஷயத்தைப்பற்றி 50 வரிகளுக்கு அதிகப்படாமல் ஒரு சிறு வியாசம் எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும். யாருடைய வியாசம் சிறந்ததாயிருக்குமோ, அவருக்கு ஒரு சிறிய நல்ல வெகுமானம் அளிக்கப்படுவதுடன், அவருடைய வியாசம் நமது பத்திரிகையில் சுருக்கமாய் வெளியிடப்படும். ஆகையால் இவ்வியாசம் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதப்பட்டு, கையொப்பத்தோடும் மேல்விலாசத்தோடும் அக்டோபர் மாதம் 15-ம் தேதிக்குள் பத்திராதிபருக்கு அனுப்பப்படவேண்டும்.

---

"We must stand for Catholic Schools, with Catholic Teachers, under Catholic control."

*(Bishop Henshaw.)*

"Catholic control of the school is the key to the situation ; if we abandon that key we abandon the house."

*(Rev, Sharrock.)*

Some of his people having offered him a motor car the Bishop of Brentwood replied that he would rather they gave him another catholic school.

---

"Not only they who produce catholic journals share in the apostolate of the press ; they also share who read the catholic journals and they much more so who propagate them."

*(M. J. Murray.)*

---

"The hand that rocks the cradle is the hand that rules the world."

2-OCT 1934
MADRAS

# The Guide.

# வழிகாட்டி.

Vol. I.] OCTOBER 1934. [No. I.

புத்தகம் 1] *Ego Sum Via.* [நம்பர் 1

## Blessed be God.

## கடவுள் ஸ்துதி.

---

" Let the Most Blessed be my guide,
If't be His blessed will,
Unto His gate, unto His fold,
Up to His holy hill ;
And let him never suffer me
To swerve or turn aside,
From His free grace and holy ways,
What'er shall me betide.
And let Him gather them of mine,
That I have left behind ;
Lord, make them pray they may be Thine
With all their heart and mind."

---

## மாமரியாயின் வாழ்த்து.

காரிருள் ஓட்டி பேரொளி காட்டும்
தாரகை யானதாய் மரியே
தீரும் என் அந்தகாரமே தீர்த்துச்
சேரும் வானோரின் ஊரினிலே.

ஞா. கி.

# WHY THIS PAPER?

## ஏன் இந்த பத்திரிகை?

" சத்தியமும் ஜீவியமும் வழியும் நாமே. என்னைப் பின் செல்லு கிறவன் அந்தகாரத்தில் நடப்பதில்லை " என்று பகர்ந்த சேசுநாதரின் திவ்விய வசனங்களைப் பின்பற்றியே, இப்புது பத்திரிகையை துவக்கலானோம். சகலமான கிறிஸ்துவர்களுக்கும் இதனால் மோக்ஷ வழியை பணிவுடன் காட்டி துணிவுடன் பின்செல்லத் தூண்டுவதுதான் இதன் முக்கிய நோக்கம். எனினும் இதன் மூலமாக நமது பங்கு விசாரணையைச் சேர்ந்த கிறிஸ்துவ சகோதரர்களுக்கு நமது கோவில் ஆசாரங்களையும் பங்கு விஷயங்களையும்பற்றி தெரிவித்து, அவர்களை வேத விஷயங்களில் ஊட்கமும் உற்சாகமும் கொள்ளும்படி செய்வதும் இதன் அலுவலாகக் கொண்டிருக்கிறோம்.

மேலும் பிரசுரங்கள் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் பத்திரிகை வாசியாதார் வெகு சொற்பம். எத்தனையோ கிறிஸ்துவர்கள் இதர மதஸ்தாருடைய பத்திரிகைகளை வாசிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய விசுவாசம் நாளுக்குநாள் தளர்ந்து போகிறதையும், சத்திய வேதத்தின்மேல் வீண் சந்தேகமும் அருவருப்புங்கொண்டு, யூதாசைப்போல் நாசமடைவதையும் கண்கூடாகக் கண்டும் கேட்டும் இருக்கிறோம். இவ்வாறு வழிதப்பிப் பிசகிபோயிருக்கிறவர்களுக்கும், அவலட்க்ஷண பாவச் சேற்றில் அமிழ்ந்திக் கிடக்கிறவர்களுக்கும், நமது புதிய பத்திரிகை ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்குமென்று நம்புகிறோம். அதைப்பற்றியே இப்பத்திரிகைக்கு " வழிகாட்டி " என்று பெயர் வைத்திருக்கிறோம். ஆகையால் நமது சுகிர்த கருத்து நிறைவேறுமாறு, சகல கிறிஸ்துவ சகோதரரும் நம்முடன் ஏகோபித்து, இப்பத்திரிகையின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். முக்கியமாய் நமது கிறிஸ்துவர்கள் அறியவேண்டிய சமாச்சாரம் அடங்கிய இப்பத்திரிகையை, மாதந்தோறும் மறவாமல் வாங்கி, மனசார வாசித்தும், வாசிப்பதைக் கேட்டும் வந்தீர்களேயானால் உங்கள் ஆத்துமத்திற்கு ஏராளமான ஞானபலனைக் கண்டடைவீர்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் நூலகம்

# A NEW EPIDEMIC.

## ஒரு நவீன தொத்து நோய்.

நாம் சாதாரணமாய் கண்டும் கேட்டும் இருப்பது பிளேக், கால்ரு, வைசூரி, பெருவாரிக் காய்ச்சல் முதலியவைகளேயாகும். ஆனால் அவை களெல்லாவற்றையும் விட மிகவும் பயரங்கத்துக்குரியதும், மோசத்துக் குரியதுமான ஒரு புது தொத்துவியாதி தற்காலம் நம்மத்தியில் தோன்றி இருக்கிறது. அதுதான் சினிமா நோய். இதன் கொடிய விஷத்தால் தீண்டப்படாத யௌவன புருஷ பூவையர் வெகு சொற்பமே உளர். இக் காலத்திய சினிமா படங்கள் பெரும்பாலும் அசுசியானவைகளும் ஒழுக்க மற்றவைகளாகவும் இருக்கின்றன வென்பது, உள்ளங்கை நெல்லிக்கனி போல் யாவர்க்கும் தெரிந்த விஷயம்.

நாடக மேடைகளில் நடிக்கப்படும் நாணமற்ற கூத்துகளும், சினி மாக்களில் வீரசெயல்கள்போல் காட்டப்படும் விபசாரக்கதைகளும், கிராம போன்களில் வாசிக்கப்படும் சிற்றின்ப பாட்டுகளும், காசுக்கு இரண்டாக விற்கப்படும் காமசாஸ்திர புஸ்தகங்களும், கால்ருபோல் கடைசிமட்டும் வாதித்து, பாவமாகிற படுகுழியில் பலபேரைத் தள்ளிவிடுகிறதென்றால் பொய்யாகுமோ ? ஓர் இந்திய சாஸ்திரியாரே சொல்லுவதைக் கேளுங்கள். "நம்மிந்திய வாலிபரின் புத்தியையும் வித்தையையும், பழக்கத்தையும் ஒழுக்கத்தையும், பாழாக்கி வருவது இச்சினிமா நோய்தான்" எத்தனை யோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சினிமா படக் காட்சிகளுக்கு ஓரே விசைமட்டும் கூட்டிக்கொண்டு போனதின் பலனை இப்போது கஸ்திப் படுகிறார்கள். வேறு அநேகர் தங்கள் பிள்ளைகள் கண்ட படக்காட்சிகளை மறந்துவிடும்படியாக எவ்வளவோ பிரார்த்தித்து வருகிறார்கள். ஏனெனில் மாசற்றவர்களின் மனதை மயக்கின மகாபாவம் அவர்களை உபாதிக்கிறது.

மெய்யாகவே இதுவிஷயத்தில் பெற்றோர்களின் கடமை மிகவும் பாரமானது. துர்மாதிரிகையின் நிமித்தம் இவ்வுலகம் சபிக்கப்பட்டிருக் கிறதென்றால், துர்மாதிரிகை கொடுக்கும் பெற்றோர் எவ்வாறு சாபத் திற்கு தப்பித்துக்கொள்ள முடியும் ? ஆகையால் தாய் தகப்பன்மார்களே ! உங்கள் கடமையை நன்றாக உணர்ந்து கெட்ட சினிமா அல்லது நாடகங் களைப் பார்க்க உங்கள் பிள்ளைகளைக் கூட்டிச் செல்லாதேயுங்கள். போதனையைவிட சாதனையே மேல் என்பதை மறக்காதேயுங்கள். அற்பசந்தோ ஷத்திற்காக பணத்தையும் காலத்தையும் சிரமத்தையும் வீணே செலவ ழித்து, ஏன் உங்கள்மேல் தேவ சாபத்தையும் வருவித்துக்கொள்ளுகிறீர் கள் ? ஆதலால் இனியென்கிலும் கெட்ட சினிமா விட்ட பாடமாயிருக் கட்டும்.

இதுவுமன்றி பொது நன்மையின்பொருட்டு அமெரிக்கா தேசத்திலிரு ந்து அதிவேகமாய் பரம்பிவரும் யோக்கியர்களின் கட்டுப்பாட்டில் அமர் ந்துகொண்டு, அசுசியான படக்காட்சிகளை அறவே ஒழிக்கத் தேடுங்கள். ஏனெனில் நமது நாட்டு சினிமாப் படங்கள் முக்கியமாய் அமெரிக்காவி

லிருந்து வருவதால், அமெரிக்கருடன் நாமும் ஒத்துழைப்பது ஞாயமாமே. அத்தேசத்திலுள்ள சினிமாக்காரர் எவ்வளவு தூரம் மனிதருடைய ஆசாபாசத்தை திருப்தி செய்யத் துவக்கிவிட்டார்களென்ருல், யோக்கியர்கள் யாவரும் அருவருப்புகொண்டு இக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தி இருக்கிருர்கள். இதுவே நற்தருணத்தின் அறிகுறி. மேலும் இச்சங்கம் அர்ச். பாப்பானவருடைய ஆசீர்வாதமும் அங்கீகாரமும் பெற்றிருப்பதால், கத்தோலிக்கரெல்லோரும் ஒருமனப்பட்டு இச்சங்கத்தை ஆதரிக்க முன்வரவேண்டும். இந்துக்களும் மகமதியரும் இச்சங்கத்தில் சேர்ந்திருப்பது நம்மிந்தியாவுக்கு ஒரு பெரிய மகிமையாகவும், கத்தோலிக்கர்க்கு ஒரு தூண்டுகோலாகவும் இருக்கிறபடியால், இதை வாசிக்கும் நண்பரும் தன் மனசாட்சிக்கு வஞ்சகம் செய்யாது, இக்கட்டுபாட்டில் சேர்ந்துகொண்டு, வெட்கத்துக்குரிய சினிமாக்களுக்கு போகாதிருப்பதுந் தவிர, மற்ற சிநேகரும் சுற்றத்தாரும் அவ்வாறே செய்யும்படிக்கு நய பயத்தால் முயலவேண்டும். அப்படி செய்து வருவோமேயாளுல் சினிமா காட்சிகள் சுத்தமாக்கப்படுவதுமன்றி, நம் இந்திய மக்களின் புத்தி அறிவும் நல்லொழுக்கமும் நாளுக்குநாள் மேன்பட்டு நற்பேர் உய்யுமென எதிர்பார்க்கலாம்.

பொது நன்மையைக் கருதுவோன்.

## QUESTION PAGE.
## கேள்விப் பக்கம்.

**1. ஏன் ஞாயிற்றுகிழமைகளில் பிரசங்கம் கேட்கவேண்டும் ?**

ஞாயிறு தினங்களை பரிசுத்தமாகப் போக்க உத்தமமான வழி பிரசங்கம் கேட்பதாகும். மேலும் ஒவ்வொரு கிறிஸ்துவனும் தன் இரட்சண்யத்திற்கடுத்த விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிருன். இக்கடமையை சரிவர நிறைவேற்ற பிரசங்கங் கேட்பதைத் தவிர்த்து வேறே வழி ஒன்றுமில்லை. இதைப்பற்றியே சேசுநாதரும் சுவிசேஷத்தை எழுதிக்கொடுங்கள் என்று சொல்லாமல் **பிரசங்கியுங்கள்** என்று சொல்லி இருக்கிருர். ஆதலால் பிரசங்கம் செய்ய குருக்களுக்கு கடமையுண்டென்ருல், கிறிஸ்துவர்களுக்கு பிரசங்கம் கேட்க கடமை இருக்குமென்பது வெளிப்படை. இன்னும் நாம் குருமார்களுக்கு செய்யவேண்டிய சங்கை மரியாதையின் நிமித்தம், பிரசங்கம் கேட்பதவசியம். எப்படியெனில் குருக்கள் நமது ஞானமேய்ப்பர்கள். வேத விஷயங்களை தீரக் கற்றறிந்தவர்கள். மீளவும் சர்வேசுரன் பேரால், தேவ வசனங்களையே போதிக்கிருர்கள். "**உங்களுக்குச்** செவிகொடுக்கிறவன் **எனக்குச்** செவி கொடுக்கிருன்." ஆகையால் இடையனின் குரலொலியை ஆவலோடு கேட்கிற ஆடுகளைப்போல, நாமும் நமது ஞான மேய்ப்பர்களின் பிரசங்கத்தை ஆசையோடு கேட்டு விசையுடன் அநுசரிக்க தீவரிப்போமாக.

**2. பாவசங்கீர்த்தனம் செய்தபின் எப்போதும் நன்மை வாங்க வேண்டுமா?**

அவசரமில்லை. ஏனெனில் அவ்வாறு கற்பிக்கிற திருச்சபை கட்டளை ஒன்றுமில்லை. வருஷத்துக்கு **ஒருமுறைமட்டும்** பாஸ்கு காலத்தில் தேவநற்கருணை உட்கொள்ளக் கடமையுண்டு. ஆதலால் யாதொரு காரணத்தை முன்னிட்டு, பாவசங்கீர்த்தனம் செய்தபின் நெடுநாள்வரையில் நன்மை வாங்காமல் இருக்கலாம். அதினுல் பாவம் விளையாது. முக்கியமாய் சரீர ஆயத்தமில்லாதவர்கள் (உ-ம். உபவாசமில்லாதவர்கள்) ஒருபோதும் நன்மை வாங்கக்கூடாது.

**3. ஏன் சங்கிலி சேபம் செய்யக்கூடாது?**

சாதாரணமாய் இச்செபங்கள் அர்ச். அந்தோனியார் அல்லது அர்ச். பிலோமினம்மாள் கடிதம் என பேர் ஊர் இல்லாமலும் கையொப்பமில்லாமலும் அனுப்பப்படுகிறபடியால், அவைகள் சூதும் கபடும் கலந்தவைகளாயிருக்கின்றன. மேலும் **மேற்றணிமார் அங்கீகாரமும்** பெறுமலிருப்பதால், அவைகளை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, முதற் கற்பனைக்கு விரோதமான **மூடபக்திக்கு** ஆளாகிறுர்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட கடிதங்கள் வந்தவுடன் அவைகளை அடுப்பில் போட்டுவிடுவதே உத்தமம். அவ்வாறு செய்யாதவர்கள் அஞ்ஞானிகளைப்போல் பேடிகளும் கோழைகளுமாயிருக்கிறுர்களென்பது நிச்சயம். ஏனெனில் அஞ்ஞானிகள் தங்கள் தேவதைக்குப் பயந்து பலிகொடுத்து வருவதுபோல், நம் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் பயப்பட்டே சங்கிலி செபம் செய்கிறுர்கள்.

## THE LOOKING GLASS.

## முகக்கண்ணுடி.

ஒரு ஊரிலுள்ள கன்னியாஸ்திரி மடத்தில் ஓர் சிறு பெண் உட்பிள்ளையாயிருந்து படித்துக்கொண்டு வந்தாள். ஒருநாள் தன் தாயாருக்கு கடிதம் எழுதி, "அம்மா தயவுசெய்து எனக்கு ஓர் முகக்கண்ணுடி வாங்கி அனுப்புங்கள்" என்று கேட்டாள். தாயார் மாறுத்தாரமாக, "ஆ என்கண்மணியே! ஒன்றுக்குப் பதிலாய் மூன்று அனுப்புகிறேன். முதல் கண்ணுடியில், "நீ எப்படி இருக்கிறுய் என்றும், இரண்டாவது கண்ணுடியில், **நீ எப்படி இருப்பாய்** என்றும், மூன்ருவது கண்ணுடியில், **நீ எப்படி இருக்கவேணும்** என்றும் காண்பாய்," என்று எழுதினுள்.

மூன்று நாள் ஆயிற்று. ஒன்றையும் காணேம். இம்மூன்று நாளும் அப்பெண்மணிக்கு மூன்று யுகம்போல் இருந்தது. கடைசியாய் ஒரு பெட்டி வந்தது. அதை திறந்தபோது, மேலே ஒரு முகக்கண்ணுடி இருந்ததைக் கண்டு, அதை ஆத்திரத்தோடே எடுத்துப் பார்த்தாள். அது முகத்தை உள்ளதுபோல் காண்பித்தது. தன் பேரழகைக் கண்டு தான் தானே பூரிப்படைந்து, கண்ணுடியில் தோன்றின பிரதி விம்பத்தை முத்திசெய்து, "ஆ, என் தாய் எவ்வளவு நல்லவள்!" என்று சந்தோஷத்தால் அக்களித்தாள்.

பிறகு கண்ணாடிக்கு அடியில் இருந்த ஒரு கடுதாசி சுருளை எடுத்து வெகு ஆயாசத்தோடு அவிழ்த்தாள். அதில் என்ன இருந்தது? **ஓர் மண்டையோட்டின் சித்திரம்!** இதுவே இரண்டாவது முகக்கண்ணாடி. இனி எப்படி ஆவாள் என்பதை நுணுநுணுக்கமாய்க் காட்டுகிறது. தன் தாயாருடைய கருத்து இன்னதென்று இச்சிறு பெண் கண்டுணர்ந்து, நெடுநேரம் இதை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தாள். ஆனால் இன்னொரு சுருள் இருக்கிறது. அதில் என்ன இருக்கக் கூடுமென்று பார்க்கிறதற்காக நடுங்கிக்கொண்டிருக்கிற கையால் அதை மெதுவாய் உடைத்துப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! அதில் என்ன இருந்தது? அமலோற்பவ தேவமாதாவின் நேர்த்தியான சுரூபம். இதைக் கண்டமாத்திரத்தில், "நான் இனி இருக்கவேண்டியதும் இப்படியே; **பாவ மாசின்றி நடக்கவேண்டும்;** சர்வேசுரனுடைய உதவியால் இதை நிறைவேற்றுவேன்" என்று தீர்மானித்துக்கொண்டாள்.

இந்த மூன்று கண்ணாடிகளில் இரண்டாவதும் மூன்றாவதுமே அவளுக்கு அதிக பிரயோசனமாயிருந்தன. முதல் கண்ணாடி ஆங்காரத்துக்கடுத்த சோதனைகளுக்குக் காரணமாயிருந்தது. இரண்டாவது கண்ணாடி ஆங்காரத்தைத் தள்ளி பயத்தை வருவித்தது. மூன்றாவது கண்ணாடியோவென்றால் பயத்தைத் தணித்து, தைரியத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்தது.

---



## THE FEASTS OF THE MONTH.

## இம்மாதத்தின் திருநாட்கள்.

2-ம் தேதி—**காவலான சம்மனசுக்கள் திருநாள்**-சர்வேசுரன் நம்மேல் வைத்த அளவில்லாத பட்சத்தின் அறிகுறியாகவன்றோ, நமக்கு ஒரு சம்மனசுவை காவலனாக கட்டளையிட்டிருக்கிறார். அதற்காக நாம் அவருக்கு நன்றியறிந்திருப்பதுடன், அவருடைய சம்மனசுக்கும் சங்கை, பக்தி, வணக்கம் கீழ்படிதல் காட்டிவருவோமானால், தெய்வ சித்தத்தின்படியே, நமது ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும்யாதொரு பொல்லாப்பு விளையாதபடி காப்பாற்றுவார்.

**3**-ம் தேதி—**குழந்தை சேசுவின் திரேசம்மாள் திருநாள்**-"பரலோகத்தின் எனது அலுவல் பூலோகத்திலுள்ளவர்களுக்கு நன்மை செய்வதே" என்று இக்கன்னிகை வாக்களித்திருப்பதால், நாம் எல்லோரும் நம்பிக்கையுடன் அவள் பாதத்தை அண்டிப் போகக்கடவோம். மேலும் இவள் அஞ்ஞான நாடுகளுக்கு பரிபாலகியா யிருப்பதால், ஆத்துமாக்களை இரட்சிப்பதில் நமக்கு உதவியாக வரும்படி மன்றாடுவோமாக.

**7**-ம் தேதி—**ஜெபமாலை மாதா திருநாள்**-முன்காலத்தில் அல்பிஜென்ஸ் என்னும் பதிதரை மனந்திருப்பியது ஜெபமாலை. இன்னும் சிலுவை யுத்தங்களிலும் திருச்சபை கலாபனைகளிலும் ஜெயமும் சமாதானமும் பெற்றுத் தந்தது இச்செபமாலையே. ஆகையால் செபமாலையால் ஆகாதது ஒன்றுமில்லை. நமது பங்கிலுள்ள மூர்க்கத்தனமுள்ள பாவிகள் மனந்திரும்புமாறு இம்மாதத்தில் ஜெபமாலை வேண்டி வருவது சாலவும் நன்று.

**22**-ம் தேதி—**விசுவாசப் பரம்புதல் ஞாயிறு**-கத்தோலிக்கர் யாவரும் விசுவாசத்தைப் பரம்பச்செய்வது அவர்கள்மேற் சுமந்த கடமையென்று காட்டவே, இச்சுபதினத்தை நமது பரிசுத்த தந்தை ஏற்படுத்தி யிருக்கிறார். ஆகையால் அஞ்ஞானிகள் மனந்திரும்பும் விஷயம் நமக்கு எவ்வளவு பிரியமும் இஷ்டமுமா யிருக்கிறதென்று காட்ட, நாம் ஜெபதபம் செய்வதுமன்றி நம்மாலான பொருளுதவியை, இன்று நன்மனதோடே கொடுக்கக் கடவோம்.

**28**-ம் தேதி-**கிறிஸ்து இராஜா திருநாள்**-சேசுநாதர் நமது இரட்சகர் என்றமட்டில் மெய்யான இராஜாவாயிருக்கிறார் என்று நாம் உணரும்படி செய்வதே இத்திருநாளின் நோக்கம். ஆகையால் கிறிஸ்துநாதரை நாம் நமது இராஜாவாக ஏற்றுக்கொண்டு அவருக்கு சங்கையும் கீழ்படிதலும் செலுத்தவேண்டும். மேலும் அவருடைய இராட்சியத்தை இவ்வுலகில் ஸ்திரமாய் நாட்டும்படி, ஜெபத்தினாலும், நல்ல கிறிஸ்துவ ஜீவியத்தினாலும், கத்தோலிக் துண்டுப் பத்திரிகைகளை பிரமதஸ்தருக்கு கொடுப்பதாலும், சமயோஜிதமாய் சத்தியவேதத்தைப் போதிப்பதாலும், பிரயாசைப்படக் கடவோம். ஆனால் **ஐக்கியமே பலம்** என்றபடி அப்போஸ்தலத்துவத்தை பலபேருடன் சேர்ந்து நடத்துவதேஉசிதம். அதற்காகவே நமதுபங்கில் **கத்தோலிக் ஐக்கிய சங்கம்** என்ற சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் சேர்ந்து அப்போஸ்தலர் வேலையை தொடர்ந்து நடத்துவது வேதாபி விர்த்திக்கு ஒரு சிறந்த சாதனமாகும்.

"புண்ணிய வொழுக்கத்தை அநேகருக்கும் கற்றுக்கொடுக்கிறவர்கள் நக்ஷத்திரங்களைப்போல் என்றென்றைக்கும் பிரகாசிப்பார்கள்."

(தானியேல் XII. 3.)

# PAROCHIAL NEWS.

## பங்கு செய்திகள்.

**ஒரு மூன்மாத்திரிகை** :—கிறிஸ்துவ தாய்மார் சபையார் சென்ற மாதம் 12 முதல் 15-ம் தேதிவரையில் ஜூபிலிப்பலனை மூன்றம்விசை அடையுமாறு குறிக்கப்பட்ட சந்திப்புக்களை சரிவர செய்து முடித்தனர். கடைசி நாளில் எல்லோரும் பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்கி வியாகுல மாதாவின் திருநாளை விமரிசையாய் கொண்டாடினர்.

**யோக்கியர் கட்டுப்பாடு** :—சென்ற மாதம் 16-ம் தேதி கத்தோலிக் ஐக்கிய சங்கத்தார் கூடின மீட்டிங்கில், யோக்கியர்களின் கட்டுப்பாட்டில் எல்லோரும் சேர்ந்துகொண்டு, அதற்கு அநேக மெம்பர்களை புறத்தியிலிருந்து சேகரித்துக் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் யோக்கியர்கள் கையொப்பமிடவேண்டிய வாக்குத்தத்த சீட்டுகள் அச்சிடப்பட்டு, நமது பங்கு கிறிஸ்துவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஐக்கிய சங்கத்து மெம்பர்களால் வழங்கப்பட உத்தரவாயிருக்கிறது.

**கத்தோலிக் பஞ்சாயத்து** :—போனமாதக் கடைசியில் கூடின கூட்டத்தில் பஞ்சாயத்து மெம்பர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்கு குறிப்பிட்டிருக்கும் இடத்திலுள்ள தாறுமாறு, சண்டை சச்சரவு, அஞ்ஞான படிப்பு முதலிய விஷயங்களைப்பற்றி கனம் பங்குசுவாமியாரவர்கள் சமுகம் அறிக்கை செய்யவேண்டுமென முடிவு கட்டப்பட்டிருக்கிறது. இப்பஞ்சாயத்து துடங்கி ஒரு வருஷமாயினும், இனிமேல்தான் இதன் அலுவல்கள் வெகு மும்முரமாயும் சிரத்தையோடும் நடத்தப்படும்.

**ஞான ஒடுக்கம்** :—சென்றமாதம் 13, 14, 15 தேதிகளில் தாயார் மடத்து பிள்ளைகளுக்கு சேசு சபைக் குருவாகிய சங். **வெஸ்டிராட்டன்** என்பவரால் ஆங்கிலத்தில் தியானம் கொடுக்கப்பட்டது. கடைசி நாளில் 30 சிறுமிகள் புதுநன்மை வாங்கினார்கள்.

**சபைகளின் அபிவிர்த்தி** :-மாமரியாயின் மைந்தர்சபையில் 10 பேரும் சேசுராஜா சபையில் 12 பேரும் புது மெம்பர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். கத்தோலிக் ஐக்கிய சங்கத்தார் இம்மாதம் 28-ம் தேதி தங்கள் வருஷாந்திர திருவிழாவைக் கொண்டாட யோசித்திருக்கிறார்கள்.

**கல்வியமுது** :–சென்றமாதம் 15-ம் தேதி அர்ச். அந்தோனியார் எலிமெண்டரி ஆண் பாடசாலை பரிக்ஷிக்கப்பட்டு நற்கீர்த்தி பெற்றுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

## வழிகாட்டி.

என்னும் குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவில் மாதாந்தர சஞ்சிகையை ஆதரியுங்கள்.

சந்தா விகிதம்:—காப்பி ஒன்றுக்கு 6 பைசாதான்.

கற்றதனாலாகிய பயனென் கொள் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின் ?

இதன் பொருள் :—படித்ததனாலென்ன பிரயோஜனம் ?
பராபரனை நன்றாய் துதிக்கனம்.

---

## பொருள் அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் ஸ்துதி ... ... | 1 |
| 2. | ஏன் இந்த பத்திரிகை? ... ... | 2 |
| 3. | ஒரு நவீன தொத்துநோய் ... ... | 3 |
| 4. | கேள்விப் பக்கம் ... ... | 4 |
| 5. | முகக்கண்ணாடி ... ... | 5 |
| 6. | இம்மாதத்தின் திருநாட்கள் ... | 6 |
| 7. | பங்கு செய்திகள் ... ... | 8 |



GET THIS GOOD LITTLE GUIDE.
for yourself
for your family
for your friends.



குன்னூர் அர்ச். அந்தோனியார் கோவில்

# பஞ்சாங்கம்.

## 1934-ஆம் அக்டோபர்-மீ

---

அர்ச். ஜெபமாலைமாதா வணக்கமாதம்.

*தினம்தோறும் 2-ம் பூசைக்குப்பிறகு*

*தேவநற்கருணை ஆசீர்வாதம்.*

2-ம்-உ செவ்வாய்கிழமை : **அர்ச். காவலான சம்மனசுகள்** *திருநாள் காலை $6\frac{3}{4}$ மணிப்பூசை கிறீஸ்துவதாய்மார் சபையார் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்படும்.*

3-ம்-உ புதன்கிழமை : **குழந்தை சேசுவின் அர்ச். தெரேசம்மாள்** *திருநாள். காலை $6\frac{3}{4}$ மணிக்கு பாட்டுப்பூசை, அதன்பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம்.*

5-ம்-உ வெள்ளிக்கிழமை : *மாதத்தின்* **முதல் வெள்ளி.** 7 *மணிக்கு* 2-ம் *பூசை சேசுவின் திருஇருதய சபையோர் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்படும். பூசைக்குப் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம், அதன் பிறகு* **சேசுவின் திருஇருதய சபையார் கூட்டம்.**

7-ம்-உ ஞாயிற்றுக்கிழமை : **மாதத்தின் முதல் ஞாயிறு. அர்ச். ஜெபமாலைமாதா திருநாள்.** *(கருமத்தம்பட்டி தேர் திருநாள்.) காலை 7 மணிக்கு முதல் பூசை, 9 மணிக்கு பாட்டுப் பூசை, மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ஜெபமாலையும் சுற்றுப்பிரகாரமும், அதன் பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம், மாலை $4\frac{1}{2}$ மணிக்கு* **கிறீஸ்துவ தாய்மார் சபை கூட்டம்.**

14-ம்-உ ஞாயிற்றுக்கிழமை : *மாலை $4\frac{1}{2}$ மணிக்கு* **மரியாயின் மைந்தர் சபை கூட்டம்.** 6 *மணிக்கு கத்தோலிக் ஐக்கிய சங்கத்தின் கூட்டம்.*

21-ம்-உ **விசுவாச பரம்புதல் ஞாயிறு :** *பூசை நேரத்தில் விசுவாச பரம்புதல் சபைக்காக தர்மதண்டல் எடுக்கப்படும். மாலை $4\frac{1}{2}$ மணிக்கு* **சேசுராஜாசபை கூட்டம்.**

28-ம்-உ ஞாயிற்றுக்கிழமை : **கிறீஸ்து இராஜா திருநாள்.** *காலை 9 மணிக்கு பாட்டுப்பூசை. மாலை $2\frac{1}{2}$ மணிக்கு கத்தோலிக்கு பஞ்சாயத்துக்கூட்டம், 6 மணிக்கு* **கத்தோலிக் ஐக்கிய சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம்.**

*" வாசம் சேர் திரு ரோசாப் பூவே*
*மா சொன்றின்றிய தாயாரே*
*யே சின்மேல் அடியோர் மென்மேலும்*
*நேசம் கொள்ள நீர் செய்வீரே."*

---

Imprimatur : † L. Tournier, Bishop of Coimbatore.